RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s135

OPEN ACCESS

# பெரியபுராணம் உணர்த்தும் பெண்களின் பண்பாடு

வா. இராஜசசிகுமார் [அ, *], க. வேலு [அ]

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) திருப்பனந்தாள்-612504, தமிழ்நாடு, இந்தியா.

# Culture of Women Depicted in Periya Puranam

V. Rajasasikumar [a, *], K. Velu [a]

[a] Department of Tamil, Sri-La-Sri Kasivasi Swaminatha Swamigal Arts College, (Affiliated to Bharathidasan University), Thiruppanandal-612504, Tamil Nadu, India.

* Corresponding Author: vasusasikumar1976@gmail.com

Received: 21-05-2022
Revised: 31-08-2022
Accepted: 14-09-2022
Published: 06-10-2022

Check for updates

**ABSTRACT**

Indian women are always following the cultural quotes and ethics of India. They stand as a role model to the whole world not only in the present era but also in the upcoming ages. The Women Portrayed in the Tamil classic literature Periya Puranam were standing representatives at all Indian women. The women in Periya Puranam made their familial relationship a cardial one and kept the hormony of the name by not revealing their misunderstanding to the world. Hospitality is one of the core characteristics of Indian culture and so Indian women never failed to maintain it. They never outsmart their husband’s word since they had much respect on them. Moreover, they aided the principles of their husbands. They married the bridegrooms whom their parents have chosen. They played the vital role to maintain the etiquettes and moral of the family and helped to keep it alive. Thus, did so, the women in Periya Puranam stand as preserving pillars of Indian culture.

**Keywords:** Periya Puranam, familial relationship, Bridegroom, Moral

## முன்னுரை

இந்திய மண்ணில் தோன்றிய சைவ, வைணவ சமயங்கள் பெண்மைக்கு முதலிடமும் முக்கியத்துவமும் தந்திருப்பதை அவ்வச்சமய இலக்கியங்களும் புராணங்களும் உணர்த்துகின்றன. மனைவியோடு இணைந்து நின்று இல்லறக்கடமைகளை ஆற்றும் போது இல்லறம் சிறக்கின்றது. ஆடவனும் (கணவனும்) சிறப்படைகின்றான்.

“மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை

எனைமாட்சித் தாயினும் இல்”

என்கின்றார் திருவள்ளுவர்.

மிக உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற மிகுந்த சிறப்பும் புகழும் அடைந்திருக்கின்ற ஒவ்வொரு ஆடவனுக்குப் பின்னாலும் ஒரு பெண் மறைந்து நிற்கின்றாள் (Varatharasan, 1998). ஆடவர்களின் உயர்வுக்கும் சிறப்பிற்கும் சமுதாயப் பெருமிதத்திற்கும் காரணமாகத் திகழ்பவர்கள் பெண்கள்தான்.

## பெண்கள் போற்றிக் காத்த பண்புகள்

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பெண் அடியார்கள் மனையறத்தின் வேராகத் திகழ்ந்தவர்கள். இந்திய நாட்டின் பண்பட்ட இல்வாழ்க்கை நெறிகளைத் தங்களின் வாழ்க்கையில் போற்றிக் காத்தவர்கள் (Chandra, 2022). இக்காலப் பெண்களுக்கு மட்டுமின்றி எதிர்வரும் பெண்சமுதாயத்திற்கும் முன்மாதிரியாகத் திகழ்பவர்கள். அவர்களது செயல்களையும் வாழ்வியல் நெறிகளையும் ஆழ்ந்து நோக்கினால் அவர்கள் போற்றிக் காத்த பண்புகளாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம். அவை மறைபிறர் அறியாமல் வாழ்ந்த தன்மை, விருந்தோம்பல், கணவர் சொல்லை மதித்து அதன்படி நடந்த பண்பு, கணவரது இறப்பிற்குப்பின் தான் மட்டும் வாழ விரும்பாமை, கணவரது கொள்கைக்கு உறுதுணையாக இருந்தமை, திருமணத்திற்கு முன் உடலுறவை அனுமதிக்காத பண்பு, பெற்றோர்களால் தேர்வு செய்யப்பட்டவரையே கணவராக ஏற்றுக்கொண்ட பண்பு.

## மறைபிறர் அறியாமல் வாழ்ந்த தன்மை

கணவன், மனைவி ஆகிய இருவருக்கிடையே நிகழும் அகவாழ்வு அவர்கள் இருவரைத் தவிர மற்றவர் யாருக்கும் தெரியக்கூடாது. இதுவே ‘மறை’ எனப்படும். இதை நிறை எனச் சங்கச் சான்றோர் குறிப்பிடுவர்.

“நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை” (Balasubramanian, 2004)

எனக் கலித்தொகையும்,

“மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை”

எனத் திருக்குறளும் குறிப்பிடுகின்றன (Varatharasan, 1998). இத்தகைய இல்வாழ்க்கை நெறியைப் பழந்தமிழர் உள்ளிட்ட இந்திய நாட்டிலுள்ளோர் தமது வாழ்வில் போற்றிக் காத்துள்ளனர். இந்நெறி திருநீலகண்ட நாயனார் வரலாற்றில் அமைந்து விளங்குகின்றது.

தனது கணவரான திருநீலகண்டர் ‘தன்னையும் தன்னைப் போன்ற பெண்களையும் மனதால்கூட இனித் தீண்டமாட்டேன்’ என்று தனக்குச் சத்தியம் செய்து கொடுத்த பிறகு, திருநீலகண்டரின் மனைவியார் அவரின் கணவருக்குத் தேவையான அனைத்துப் பணிவிடைகளையும் தேவைகளையும் (அவரது உடலைக்கூடத் தொடாமல்) மிகுந்த அன்புடன் செய்து கொடுத்து வெளி உலகத்தாருக்குக் கணவன் மனைவி போல் வாழ்ந்து வந்தார்கள். உள்ளப்புணர்ச்சியும் உடல்புணர்ச்சியும் அவர்களிடத்தே நிகழவில்லை, இவ்வாறு பல ஆண்டு காலம் இன்பத்தைத் துய்த்திட வேண்டிய இளமைப்பருவம் தொடங்கி முதுமைப்பருவம் வந்தடைந்த பிறகும் கூட வாழ்ந்து வந்தனர். ஒரே வீட்டில் கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரது உடலைக் கூடத் தொட்டுக்கொள்ளாமல் பல ஆண்டு காலமாக வாழ்ந்து வந்தனர். இதனைச் சேக்கிழார்,

“கற்புறு மனைவியாரும் கணவனார்க்கான எல்லாம்

பொற்புற மெய்யுறாமல் பொருந்துவப் போற்றிசெய்தே

இற்புறம் பொழிவாயா தங்கண் இருவரும் வேறுவைகி

அற்புறு புணர்ச்சி இன்மை அயலறியாமை வாழ்ந்தார்”

என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013). திருநீலகண்டரின் மனைவியார், தன் கணவருடன் பல ஆண்டுகாலம் உடலுறவு கொள்ளாமல் வாழ்ந்ததை அயலார் யாரும் அறிந்து கொள்ளாதவண்ணம் வாழ்ந்தார் என்று சேக்கிழார் கூறுவதன் மூலம் திருநீலகண்டரின் மனைவியார் மறைபிறர் அறியாமல் வாழ்ந்த பண்பை நாம் அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் பெண்களுக்கு செறிவு, நிறைவு, செம்மை, செப்பு, அறிவு, அருமை என்னும் அறுவகை சிறப்பியல்புகளைக் கூறுகின்றார். இதனை

“செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பா லான”

என்ற தொல்காப்பியநூற்பாவால் அறியமுடிகின்றது (Ponnusamy, 1976).

இவ்வறுவகை இயல்புகளும் திருநீலகண்டரின் மனைவியாரிடம் அமைந்திருத்தலை அவரது வாழ்வு உணர்த்துகின்றது. “மனிதர் தம்மை அமரர்களாக்கும் மகாசக்தியே பெண்” (Meiyappan, 1992) என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க தன் கணவரை நல்வழிப்படுத்தியவர் திருநீலகண்டரின் மனைவியாவார்.

## விருந்தோம்பல்

தமிழர்கள் விருந்தோம்பும் பண்பிலே சிறந்து விளங்கியவர்கள். விருந்தோம்பும் முறையைப் பற்றியும் விருந்தோம்பிய திறத்தைப் பற்றியும் கூறும் பாடல்கள் தமிழிலக்கியங்களில் மிகுதியாக உள்ளன (Thenmozhi, 2020). திருவள்ளுவரும் விருந்தோம்பலுக்கெனத் தனி அதிகாரமே அமைத்திருக்கின்றார்.

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு”

எனத் திருவள்ளுவர் விருந்தோம்புவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றார் (Varatharasan, 1998).

கணவனும் மனைவியும் இணைந்தே விருந்தினர்களை வரவேற்று உபசரித்தல் வேண்டும். மனைவி மட்டும் விருந்தினர்களை உபசரித்தல் கூடாது, கண்ணகி, தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து வாழ்வதற்காகக்கூட வருந்தாது விருந்தினர்களை வரவேற்று உபசரிக்க முடியாத நிலைக்கே வருந்தினாள். இதனை,

“அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார் (Swaminatha Iyer, 2009). இதன் மூலம் கண்ணகி, அறநெறியாளர்களுக்கு உணவளித்தலும் அந்தணர்களைப் பாதுகாத்தலும், துறவியரை எதிர்கொண்டு உபசரித்தலும் முன்னோரின் சிறந்த நிலையைப் போல வரும் விருந்தினரை எதிர்கொண்டு உபசரித்தலும் முடியாமல் போனதற்கு வருந்துகின்றாள் என அறிகின்றோம்.

சீதை அசோகவனத்தில் சிறையிலிருந்தபோது, விருந்தினர்கள் வந்தால் அவர்களை இராமன் எப்படி உபசரிப்பாரோ? என எண்ணி,

“விருந்து கண்டபோது என் உறுமோ? என்று விம்மும்”

என்று சீதை வருத்தப்பட்டதாகக் கம்பர் குறிப்பிடுகின்றார் (Ramasubramaniam, 2005).

பெரியபுராணத்தில் இடம் பெறும் அடியவர்களின் மனைவியர்கள் விருந்தோம்பும் பண்பில் தங்களின் கணவரது குறிப்பறிந்து விருந்தினர்களை நன்றாக உபசரித்திருக்கின்றார்கள்.

இளையான் குடிமாறரும் அவர் மனைவியாரும் நாள்தோறும் அடியவர்களுக்கு உணவு படைத்து உபசரித்து வந்தனர். இறைவன் (சிவபெருமான்) திருவருளால் வறுமையடைந்தபோது, இரவு நேரத்தில் தங்களது இல்லத்திற்கு வந்த சிவனடியாரை அன்புடன் வரவேற்று உபசரத்தினர். அவர்கள் இருவருக்குமே உண்ண உணவின்றி பட்டினி கிடந்தபோது, இளையான்குடிமாறர் தன் வீடுதேடி வந்த சிவனடியாருக்கு எப்படி உணவு படைப்பது? என்று செய்வதறியாது தன் மனைவியிடம் வினவ, ‘பகலில் வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் உணவு சமைக்கலாம்’ என்று அவர் கூற, அவ்வாறே இளையான்குடிமாறர் வயலிலிருந்து கொண்டு வந்த நெல்லைக் கொண்டு சோறு

சமைத்தும், கொல்லையில் இருந்த கீரைகளைக் கொண்டு பலவிதமான கறிகளைச் சமைத்தும் வந்திருந்த சிவனடியாரை அன்புடன் உபசரித்தனர் என்பதிலிருந்து இளையான்குடிமாறரின் மனைவியுடைய விருந்தோம்பும் குணத்தினை அறிய முடிகின்றது.

சிறுத்தொண்டரின் மனைவியரான திருவெண்காட்டு நங்கை, தங்களின் இல்லத்திற்குக் காபாலிக வேடத்தோடு வந்த சிவபெருமானுக்கு அவரது விருப்பத்தின்படியே தங்களின் ஒரே புதல்வனான சீராளனை அரிந்து, கறிசமைத்து உணவளித்து உபசரித்தச் செயலிலிருந்து திருவெண்காட்டு நங்கையின் விருந்தோம்பல் பண்பை அறியமுடிகின்றது.

சேக்கிழார் திருவெண்காட்டு நங்கையை ஒரு முழுமையான குடும்பத் தலைவியாகப் படைத்துக் காட்டியுள்ளார். ஒரு குடும்பத்தலைவிக்கு வேண்டிய அருங்குணங்கள் அனைத்தும் அவரிடம் குடிகொண்டுள்ளன. நற்குடிப்பிறப்பு, அடியாருக்கு மெய்ப்பணி செய்வதில் கணவரைப் போலவே ஈடுபாடு, மனைவிக்குரிய காதல், கணவருடன் ஒருமித்த கருத்து ஆகியவைகளைக் கொண்டிருக்கின்றார் திருவெண்காட்டு நங்கை. இதனைச் சேக்கிழார்,

"வேதகாரணர் அடியார் வேண்டிய மெய்ப்பணி செய்யத்

தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை எனும்

காதல் மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும் பெருமை

நீதிமனை அறம்புரியும் நீர்மையினை நிலைநிற்பார்

என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

சிறுத்தொண்டர் இல்லறம் ஏற்றதே அடியாருக்கு மெய்ப்பணி செய்யக் கருதித்தான் அவருடைய கொள்கைக்கேற்றவராய் திருவெண்காட்டுநங்கை அமைந்திருந்தார். நற்குடிப்பிறப்பு ஒருமனைவிக்கு வேண்டிய முதற்சிறப்பு. இல்லறம் சிறக்க மனைவியின் காதல் நெஞ்சமே அடிப்படையாகின்றது. காதல் இருந்தால் மட்டும் போதாது. கருத்தும் ஒன்றியிருந்தால்தான் வாழ்வில் இடையூறு இன்றி இன்பம் இறுதிவரை நிலைத்திருக்கும். ஆதலினால்தான்

"காதலிருவர் கருத்தொருமித்து

ஆதரவு பட்டதே இன்பம்" (Ilavalaganar, 1947)

என்று ஔவையாரும்

மருவிய காதல் மனையாளுந் தானும்

இருவரும் பூண்டுய்ப் பினல்லால் - ஒருவரால்

இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடம்

செல்லாது தெற்றிற்று நின்று"

என்று முனைப்பாடியாரும் கூறுகின்றார்கள் (Ilavalaganar, 1947).

இவ்வாறு இளையான்குடிமாற நாயனாரும், சிறுத்தொண்டரும் அடியார்களின் வரிசையில் இடம்பெற்றுச் சிறப்புடன் திகழ்வதற்குக் காரணம் அவர்களின் மனைவியர்களது 'மனைமாட்சியே' ஆகும். இளையான்குடிமாறர், சிறுத்தொண்டர் ஆகியோரின் நிலைத்த புகழுக்குக் காரணமாகத் திகழ்பவர்கள் அவர்களின் மனைவியர்களே எனலாம்.

பரவையார் கொண்ட ஊடலைத் தணிப்பதற்காகச் சுந்தரர், சிவபெருமானைப் பரவையாரிடம் தூது அனுப்பினார். இதை அறிந்த ஏயர்கோன் கலிக்காமர், சிவபெருமானைத் தூதாக அனுப்பிய செயலுக்காக சுந்தரர் மீது கோபமும் வருத்தமும் கொண்டார். ஏயர்கோனுக்கும் சுந்தரருக்கும் மீண்டும் நல்லுறவை உண்டாக்கவேண்டி சிவபெருமான் ஏயர்கோன் கலிக்காமருக்குச் சூலை நோயைக் கொடுத்தருளி,

“உனை வருத்தும் சூலை வன்தொண்டன் (சுந்தரர்) தீர்க்கில்அன்றி முந்துற ஒழியாது”

என்று கூறிவிட்டு, சுந்தரரிடம் சென்று, ‘ஏயர்கோன் உற்ற சூலை சென்று நீ தீர்ப்பாயாக’ என்று திருவாய் மலர்ந்தருளினார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

சுந்தரர் தனது சூலை நோயைத் தீர்க்க வந்து கொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட ஏயர்கோன் கலிக்காமர்,

“மற்றவன் இங்குவந்து தீர்ப்பதன் முன்நான் மாயப்

பற்றிநின் றென்னை நீங்காப் பாதகச்சூலை தன்னை

உற்ற இவ்வயிற்றினொடுங் கிழிப்பேன்”

என்று கூறித் தன்னுடைய உடைவாளால் தன்னுடைய வயிற்றில் குத்திக்கொள்ள உயிரோடு சூலைநோயும் தீர்ந்தது (Karuvoor Eazhathu Adigal, 2013).

தன் கணவருடன் உயிர்விட முற்பட்ட ஏயர்கோன் கலிக்காமரின் மனைவியார், ‘சுந்தரர் வந்து விட்டார்’ என்பதைக் கேள்விப்பட்டவுடன் ‘ஒருவரும் அழுதல் செய்யா தொழிக’ என்று கூறிவிட்டு, கணவர் இறந்து போனதைச் சுந்தரர் அறிந்து கொள்ளாவண்ணம் மறைத்துவிட்டு, அரண்மனையை அலங்கரித்து வாயிலில் தூபதீப ஆராதனைகளுடன், பூரணகும்ப மரியாதையோடு சுந்தரரை வரவேற்று உபசரித்தார்.

கணவர் இறந்து போன சிறிது நேரத்திற்குள்ளாகவே, தன்னுடைய எல்லையில்லாத் துயரத்தையும், சோகத்தையும் மறைத்துக் கொண்டு, கணவர் இறந்து போன சம்பவத்தையும் மறைத்துவிட்டு, தன் இருப்பிடத்திற்கு வந்த சுந்தரரை- யார் மீது கொண்ட கோபத்தினால் தன்னுடைய கணவர் இறந்துபட்டாரோ அந்தச் சிவனடியாரை, தன் கணவனை நாடித் தன் இல்லத்திற்கு வந்தவுடன் அன்போடு வரவேற்று உபசரித்த ஏயர்கோன் கலிக்காமருடைய மனைவியின் பண்பு வியப்பிற்குரியதாக அமைந்துள்ளது.

தங்கள் இல்லத்திற்கு எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசரை உபசரித்து உணவு படைப்பதற்கான பணிகளில் அப்பூதி அடிகளாரும், அவர் மனைவியாரும் முனைந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது வாழைக் குருத்தை அறுக்கச் சென்ற அவர்களின் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பினால் தீண்டப்பட்டு, நஞ்சேறி, வாழைக் குருத்தைத் தன் தாயின் மடிமீது வைத்துவிட்டு, கீழே விழுந்து இறந்தான். இச்செய்தியை அறிந்தால் திருநாவுக்கரசர் உணவு உண்ண மாட்டார் என்று இறந்து போன தங்கள் மகனைப் பாயில் வைத்து மூடி, வீட்டின் ஓர் ஓரத்தில் வைத்துவிட்டு, தங்கள் மகனைப் பாம்பு தீண்டியது தெரியா வண்ணம் உணவு படைப்போம் என்று எண்ணி (பெரியபுராணம் 1982) திருநாவுக்கரசருக்கு உணவு படைக்க முற்பட்டனர். இதிலிருந்து தங்களின் மகன் பாம்பு தீண்டி இறந்து போன நிலையிலும் வந்த விருந்தினரை (திருநாவுக்கரசரை)) அன்புடன் வரவேற்று விருந்தோம்பிய அப்பூதியடிகளாரின் மனைவியின் விருந்தோம்பல் திறம் எண்ணி எண்ணி போற்றுதற்குரியது. இவ்வாறு, பெரியபுராணத்தில் காணப்பெறும் அடியவர்களின் விருந்தோம்பிய திறத்திற்கு அடித்தளமாக அவர்களின் மனைவியர்கள்தான் திகழ்ந்திருக்கின்றார்கள் எனில் அது மிகையாகாது.

## கணவர் சொல்லை மதித்து அதன்படி நடந்த பண்பு

கணவர் சொற்படியே நடப்பதையும், விருப்பப்படியே வாழ்வதையும் இந்தியப் பெண்கள் கற்பு நெறியாகக் கொண்டிருக்கின்றார்கள். தன்னிடம் உள்ள செல்வங்களை யெல்லாம் தன்னை நாடிவந்த சிவனடியார்களுக்கே வாரி வழங்கி வாழ்ந்து வந்த இயற்கை நாயனார்,

“மிக்க சீரடியார்கள் யாரெனினும் வேண்டும்

யாவையும் இல்லையென்னாது கொடுக்கும் இயல்புடையவர்”

சிவபெருமான் தூர்த்த வேடத்தோடு இயற்பகையாரிடம் வந்து, 'சிவனடியார்கள் விரும்பிக் கேட்பனவற்றையெல்லாம் நீ மறுக்காது கொடுக்கும் திறத்தைக் கேட்டு உன்னிடம் ஒன்று பெற விரும்பி இன்று நான் வந்துள்ளேன் (Karuvoor Eazhathu Adigal, 2013). அதற்கு நீ உடன்பட்டால் நான் கேட்கிறேன்' என்று கூற, அதற்கு இயற்பகையார்,

"யாதும் ஒன்றும் என்பக்கல் உண்டாகில்; அன்னது

எம்பிரான் அடியவர் உடைமை"

"அதனால் நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள்" என்று கூற, வந்த அடியவர் 'உன் மனைவியைக் கொடு' என்று கேட்கின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013). இயற்பகையார் மிக மகிழ்ந்து தன் மனைவியிடம் சென்று,

"விதி மணக்குல மடந்தை! இன்று உனை

இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்' (Karuvoor Eazhathu Adigal, 2013)

என்று கூற அவரும் சற்று மனம் கலங்கிய பின் தெளிந்து,

"இன்று நீர் எனக்கு அருள்செய்தது இதுவேல் என்னுயிர்க் கொருநாத! நீர் உரைத்தது ஒன்றை நான் செய்யும் அத்தனை அல்லால் உரிமை வேறு உளதோ எனக்கு?" (Karuvoor Eazhathu Adigal, 2013) நீங்கள் கூறியதைச் செய்வதைத் தவிர வேறொரு பாக்கியம் எனக்கு உண்டோ? என்று கூறித் தன் கணவரை வணங்கிய பின்னர், தூர்த்த வேடத்தோடு வந்த சிவபெருமானின் திருவடிகளையும் வணங்கி நின்றார். பிறகு தூர்த்த வடிவில் வந்திருந்த சிவபெருமானுடனேயே புறப்பட்டுச் சென்றார்.

இயற்பகையார் மனைவியின் வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து, தன் கணவரது வாக்கை வேதவாக்காகக் கருதி செயல்படும் அவரது பண்பு புலப்படுகின்றது. சரியோ தவறோ தன் கணவர் கூறினால் அதைப்பற்றி ஆய்வு செய்யாமல் மனதிற்குள் போராட்டம் நிகழ்த்திக் கொள்ளாமல் அதை இறைவன் கூறியாதாகவே கொண்டு அதன்படியே நடக்கின்ற இந்தியப் பெண்மையின் ஒரு குறியீடாகவே இயற்பகை நாயனாரின் மனைவியைக் கருத வேண்டும்.

## கணவரது இறப்பிற்குப்பின் தான்மட்டும் வாழ விரும்பாமை

கணவர் இறந்த பிறகு தான் மட்டும் வாழ விரும்பாது 'உடன்கட்டை' ஏறும் பழக்கத்தை, உயிரைப் போக்கிக் கொள்ளும் வழக்கத்தைத் தமிழ்ப்பெண்கள் பின்பற்றினார்கள் என்பது பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து தெரிய வருகின்றது. தன் கணவரை இழந்த பெண்ணொருத்தி மண்பாண்டம் செய்பவரிடம், தானும் இறப்பதற்கேற்றவாறு பெரிய அகலமான தாழி (மண்பானை) ஒன்றைச் செய்து தருமாறு வேண்டுகின்றார். இதனை,

"வியன்மலர் அகன்பொழில் ஈமத்தாழி

அகலிது ஆக வனைமோ

நனந்தலை மூதூர்க் கலம்செய் கோவே"

என்ற புறநானூற்றுப் பாடலால் அறியமுடிகின்றது (Subramaniyan, 2007).

'ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப்பெண்டு தன் கணவர் இறந்தவுடன் தான் மட்டும் வாழ விரும்பாது, தீமூட்டிச் சான்றோர் விலக்கவும் விலகாது தீயினுள் புகுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டார்' (Subramaniyan, 2007). பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்தவுடன், அவர் மனைவி கோப்பெருந்தேவி தானும் உடனே உயிரை விட்டார். இவ்வழக்கம் தொடர்ச்சியாக தமிழகத்தில் நிலவி வந்துள்ளது. பெரிய புராணத்தில் காணப்படும் பெண் அடியார்களிடத்திலும் இவ்வழக்கத்தினைக் காணமுடிகின்றது (Swaminatha Iyer, 2009).

திருநாவுக்கரசரின் தந்தை புகழனார் இறந்தவுடன், அவரின் மனைவி மாதினியார் தான்மட்டும் உயிர்வாழ விரும்பாமல் உடனே இறந்து விட்டார் என்பதைச் சேக்கிழார், 'கற்பு நெறி வழுவாமல் கணவனாருடன் சென்றார்' என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

சுந்தரரால் தனது சூலைநோய் தீர்க்கப்படுவதை விரும்பாத ஏயர்கோன் கலிக்காமர், தனது உடைவாளால் தன் உயிரைப் போக்கிக் கொண்டதை அறிந்த அவரின் மனைவியார், கணவர் இறந்த பிறகு தானும் உயிர்வாழ விரும்பாது தன் உயிரைப் போக்கிக் கொள்ள முற்பட்டார் என்பதைச் சேக்கிழார்,

"கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் தேவியாரும்

பொருவரும் கணவரோடு போவது புரியுங்காலை"

என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

திருமணம் இன்னும் நிகழவில்லை ஆனால் தனக்கென நிச்சயிக்கப்பட்டவர் (கலிப்பகையார்) போர்க்களத்தில் இறந்தவுடன் (தனக்கும் அவருக்கும் இன்னும் திருமணம் நிகழப் பெறவில்லையே என்று கூட கருதாமல்) தானும் உயிரைப் போக்கிக் கொள்ள முற்பட்டார் திருநாவுக்கரசரின் தமக்கை திலகவதியார். இதனைச் சேக்கிழார்,

"எந்தையும் எம்அனையும் அவர்க்கு எனைக்கொடுக்க இசைந்தார்கள்

அந்த முறையில் அவர்க்கே உரியது நான் ஆதலின்

இந்த உயிர் அவர் உயிரோடு இசைவிப்பன்"

என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

மேற்கூறியவற்றில் தன் கணவர் இறந்த பிறகு தான் மட்டும் வாழவிரும்பாத பெண் அடியார்களின் பண்பினை அறிய முடிகின்றது.

## கணவரது கொள்கைக்கு உறுதுணையாக இருந்தமை

கணவரது கொள்கைக்கு மனவை உறுதுணையாக இருந்தால்தான் கணவர் தனது கொள்கையில் நிலைத்து நின்று வெற்றியடைய முடியும்; அவர்களது இல்வாழ்வும் சிறப்படையும். இந்திய நாட்டுப் பெண்கள் எக்காலத்திலும் தங்களின் கணவரது கொள்கைக்கும் அவரது உயர்வுக்கும் அடிப்டை ஆதாரமாக திகழ்கின்றவர்கள். இத்தகு பாரம்பரியத்தில் தோன்றி வளர்ந்த பெரியபுராணத்தில் இடம் பெறும் பெண்களும் மேற்குறிப்பிட்ட பண்பைப் போற்றிக் காத்தவர்களாகவே காணப்படுகின்றார்கள்.

கலியநாயனரின் மனைவியார் திருக்கோயிலுக்கு நாள்தோறும் திருவிளக்கு ஏற்றும் தன் கணவரின் திருப்பணிக்கு உறுதுணையாக இருந்தார். இறையருளால் செல்வமின்றித் திருப்பணி தடைப்பட்டு, கலியநாயனார் மிகவும் வருந்தி தனது மனைவியை விற்று அதன் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு திருவிளக்கேற்றும் தன் பணியைத் தொடர முற்பட்டபோது, அதற்குச் சிறிதும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் தன் கணவருடைய திருப்பணிக்கு ஆதரவாக நடந்து கொண்டவர் கலியநாயனாரின் மனைவியார். இதனை,

"பணிகொள்ளும் படம் பக்க நாயகர்தம் கோயிலினுள்

அணிகொள்ளும் திருவிளக்குப் பணி மாறும் அமையத்தில்

மணிவண்ணச் சுடர் விளக்கு மாளில்யான் மாள்வன்னைத்

துணிவுள்ளங் கொளநினைந்தவ் வினைமுடிக்கத் தொடங்குவார்"

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

அரிவாட்டாய நாயனாரின் மனைவியார் சிவபெருமானுக்குப் படையலிடும் பணிக்கு தன் கணவருடைய திருத்தொண்டிற்கு உறுதுணையாக இருந்தார். செந்நெல் அரிசி கொண்டு உணவு சமைத்து, மாவடு, செங்கீரை முதலானவற்றைக் கொண்டு கறி சமைத்து சிவபெருமானுக்குப் படையலிட உதவினர். தானும் தன் கணவரோடு சிவபெருமானுக்குத் தேவையான வழிபாட்டுப் பொருட்களை சுமந்து கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றார். இதனை,

"முன்புபோல் முதல்வ னாரை அமுதுசெய் விக்கமூளும்

அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென்கீரை

துன்புபோம் மனத்துத் தொண்டர் உடையில் சுமந்துபோகப்

பின்புபோம் மனைவியார்ஆள் பெற்றஅஞ்சேந்திச் சென்றார்"

என்று சேக்கிழரர் குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

## திருமணத்திற்கு முன் உடலுறவை அனுமதிக்காத பண்பு

வைப்பூர்கோன் தாமன், தன் ஏழு மகள்களில் மூத்த மகளைத் தன்னுடைய மைத்துனருக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகக் கூறிவிட்டு, பிறகு வேறொருவரிடம் நிறைய செல்வத்தைப் பெற்றுக் கொண்டு அவருக்கே தன்னுடைய மூத்த மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிடுகின்றார்.

இப்படியே தன்னுடைய மற்ற ஆறு மகள்களில் ஐந்து மகள்களை மற்றவர்க்கே திருமணம் செய்து கொடுத்துவிடுகின்றார். ஏழாவது மகள் தனது மாமன் மீது கொண்ட இரக்கத்தினால் அவருடன் உடன்போக்கு சென்றுவிடுகின்றாள்.

அவர்கள் இரவில் தனியே புறப்பட்டு வருகின்றார்கள். திருமருகல் என்னும் ஊரிலுள்ள சத்திரத்தில் நடந்துவந்த களைப்பு தீர தூங்குகின்றார்கள். அப்போது, அப்பெண்ணின் மாமன் பாம்பினால் தீண்டப்பட்டு இறந்துவிடுகின்றார். தன்னுடைய மாமனுக்கு ஏற்பட்ட நிலைகண்டு, அப்பெண் தன்நிலை தளர்ந்து, அழுது அரற்றுகின்றாள். அழுது அழுது இறந்துபோன தன் மாமன் அருகிலேயே சோர்ந்து விழுகின்றாளே தவிர சிறிது கூட தன் மாமனைத் தொடவில்லை. அவள் உடலும் அவள் மாமன் மேல் படவேயில்லை.

திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற முடிவோடு புறப்பட்டு வந்த அவர்களுக்கு முறைப்படி இன்னும் திருமணம் நடைபெறவில்லை. அதற்குள் பாம்பு தீண்டி அவள் மாமனின் உயிரைப்போக்கிவிட்டது. முறையாகத் திருமணம் நடைபெறாதக் காரணத்தால் இறந்துபோன தன் மாமனைத் தொட்டு அழுவதற்குக்கூட அவள் உரிமையில்லாதவளாக ஆகிவிட்டாள். இதனை,

"வாள் அரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்

மறு மாற்றம் மற்று ஒருவர் கொடுப் பார் இன்றி,

ஆள் அரி ஏறு அனையானை அணுக வீழ்ந்தே

அசைந்த மலர்க்கொடி போல்வாள் அரற்றும் போது"

என்று கூறுகின்ற சேக்கிழார், எங்கிருந்தோ ஓடிவந்த பாம்புக்குக் கூட அவள் மாமனைத் தீண்ட உரிமையிருந்தும், தான் மட்டும் அவரைத் தீண்ட உரிமையில்லை என்று குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

இந்த நிகழ்ச்சியிலிருந்து எவ்வளவு தான் நெருக்கமான உறவினராக இருந்தாலும், திருமணம் நடைபெறுவதற்கு முன்னால் தான் விரும்பும் பெண்ணின் உடலைத் தொடுவதுகூட பண்புக்குறைவு என்று கருதுகின்ற ஆண்மையின் பெருமிதம் தெரிகின்றது.

## பெற்றோர்களால் தேர்வு செய்யப் பெற்றவரையே கணவராக ஏற்றுக்கொண்ட பண்பு

பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பெண்கள் தங்களின் பெற்றோர்களால் பார்த்து நிச்சயம் செய்யப்பட்டவர்களையே தங்கள் கணவன்மார்களாக ஏற்றுக் கொண்டார்கள். மானக்கஞ்சாரரின் மகள் தன் தந்தையால் பார்த்து நிச்சயம் செய்யப்பட்ட ஏயர்கோன் கலிக்காமரையே தன் கணவராக ஏற்றுக் கொண்டார். இதனை,

"வந்தமுத தறிவோரை மானக்கஞ் சாறனார்

முந்தைமுறை மையின் விரும்பி மொழிந்தமணத் திறம்கேட்டே

எந்தமது மரபினுக்குந் தரும்பரிசால் ஏயும்எனச்

சிந்தைமகிழ் வுறவுரைந்து மணநேர்ந்து செலவிட்டார்"

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

காரைக்கால் அம்மையார் தன் தந்தையாராகிய தனத்தனால் நிச்சயம் செய்யப்பட்ட பரமதத்தனையே திருமணம் செய்து கொண்டார். இதனை,

"வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து

தந்தையாம் தனதத்தன் தலைநேர்ந்து நீபயந்த

பைந்தொடியை நிதிபதினமஞ் தன்பரம தத்தனுக்கு

முன்தைமர பினுக்கேற்கும் முறைமைமணம் புரிகென்றார்"

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார் (Karuvoor Eazhathu Adigal, 2013).

திலகவதியார் தன் தந்தையாரால் நிச்சயம் செய்யப் பெற்ற கலிப்பகையாரையே தன் கணவராக ஏற்றுக் கொண்டார். இதனை,

"அணங்கனைய திலகவதி யார்தம்மை ஆங்கவர்க்கு

மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்

குணம்பேசி குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனார்

பணம்கொளர வகல்அல்குல் பைந்தொடியை மணம்நேர்ந்தார்"

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இது போன்ற நிகழ்வுகளிலிருந்து பெற்றோர்களால் தேர்வு செய்யப்பெற்றவரையே கணவராக ஏற்றுக்கொண்ட பெண்களின் பண்பு புலனாகின்றது (Karuvoor Eazhathu Adigal, 2013).

## முடிவுரை

தங்களைப் படைத்த இறைவனிடத்திலும், தங்களை மணந்த கணவரிடத்திலும், தங்கள் இல்லங்களை நாடிவந்த சிவனடியார்களிடத்திலும் பெரியபுராணத்து பெண்கள் பக்தி செலுத்துகின்றார்கள். தன் கணவரின் கருத்திற்கிசைய நடப்பதே கற்பு எனப் போற்றி வாழ்ந்தார்கள். கணவரைத் திருத்தி நல்வழிப்படுத்தினார்கள். இல்லறத்தாரின் பெருங்கடமைகளுள் ஒன்றான விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினார்கள். கணவர் சொல்லை மதித்து நடந்தார்கள். கணவர் இல்லாத இவ்வுலகில் வாழ விரும்பாமல் உயிர்த்துறந்தார்கள். தங்களின் வாழ்நாள் முழுவதும் கணவரது கொள்கைக்கு உறுதுணையாக இருப்பதே தங்களின் கடமை என எண்ணினார்கள். தங்களின் பெற்றோர்கள் காட்டிய வழியில் வாழ்ந்து சிறப்பு பெற்றார்கள். பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ள பெண்கள் தாங்கள் உயர்வடைந்ததோடு தங்களைச் சார்ந்த ஆடவர்களையும் உயர்த்தி பெருமையுடன் விளங்குகின்றார்கள்.

## References

Balasubramanian, K.V., (2004) Kalithogai, New Century Book House, Chennai, India.

Chandra, T., (2022) Family Confromation in Periyapuranam, International Research Journal of Tamil, 4(SPL 1), 72-76. https://doi.org/10.34256/irjt22s111

Ilavalaganar, (1974) Avvaiyar Perumthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Karuvoor Eazhathu Adigal, (2013) Periyapurana Aarachi, Periyar suyamariyathai veeliyeedu, Chennai, India.

Meiyappan, S., (1992) Bharathiyar Kavidhaigal, Manivaasagar Pathippagam, Chennai, India.

Ponnusamy, (1976) Tholkkapiyam Porulathiagaram, Ramasamy and Sons, Chennai, India.

Ramasubramaniam, V.T., (2005) Kambaramayanam Ayothiya Kaandam, Thirumagal Nilaiyam, Chennai, India.

Subramaniyan, S.V., (2007) Sanga Ellakiyam, Ettu Thogai, Saratha Publication, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (2009) Silappathiagaram moolamum uraiyum, U.V.SA., Library, Chennai, India.

Thenmozhi, K., (2020) A Review of the Aim and Trend of Hospitality in Sangam Literature, Indian Journal of Tamil, 1(3) 8-13. https://doi.org/10.34256/ijot2032

Varatharasan, M. (1998) Thirukkural Thalivurai, The south India Saiva Siddhanda Works Publishing Society, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License